[*2023 ஏப்ரல் 21*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட அமைப்புசாரா சங்கங்களின் சட்டங்களை, ஒன்றிய அரசு* silent *ஆக இரத்து செய்துவிட்டது. அதனை நாம் அமல்படுத்துவோமா என்ற கேள்வியை எழுப்பி, அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

(அஉ) தீப்பெட்டித் தொழிலுக்கு எதிரான Plastic lighter விற்பனையைத் தடை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழில் தென்மாவட்ட மக்களின் வாழ்வாதாரமாக மட்டுமல்லாமல், பல்லாயிரக்கணக்கான ஏழைப் பெண் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்தைத் தருகின்ற தொழிலாக இருக்கின்றது. தற்சமயம் பிளாஸ்டிக்காலான* lighters *வெளிநாடுகளிலிருந்து முறைகேடாக இங்கே விற்பனைக்கு பெருமளவில் உள்ளதால், தீப்பெட்டி விற்பனை பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, கோவில்பட்டியில் உள்ள ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலையை 8-9-2022 அன்று ஆய்வு செய்தார்கள். உடனடியாக மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினார்கள். 15-11-2022 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற உற்பத்தியாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு அண்ணன் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய அனுமதியுடன் நானும் சென்று மத்திய அரசை வலியுறுத்தியிருக்கிறோம். அந்த* lighter-*ஐ தடை செய்து, தீப்பெட்டித் தொழிலை வாழ வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு பிறந்த நாள் பரிசாக அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

(அஊ) கோயம்புத்தூர் மாவட்டம், தொழிற்சாலைகளால் நதிநீரில் ஏற்படும் மாசு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

2023 ஏப்ரல் 21]

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கு மண்டலம் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாகும். காவிரி, காளிங்கராயன், பவானி, நொய்யல், அமராவதி என அத்தனை நதிகளுடைய தண்ணீரைக் குடிப்பவர்கள் புற்றுநோயாலும், தோல் வியாதிகளாலும் அவதிப்படுகிறார்கள். என்னைப் போன்றவர்கள் கொங்கு மண்டலத்தில், உயிரிழப்புக்கு வருத்தம் தெரிவிக்கச் சென்றால், பாதி உயிரிழப்பு புற்றுநோயால் ஏற்படுகிறது என்பது தெரிய வருகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஸ்டெர்லைட்டால் பாதிப்பு ஏற்படுவதைப் போன்று பல மடங்கு* pollution *அங்கு ஏற்படுகிறது. எனவே, இதில் அரசு சிறப்பான கவனத்தைச் செலுத்த வேண்டும். இதில், ஒரேயொரு குறிப்பை மட்டும் சொல்லிவிடுகிறேன்; கொரோனா காலத்தில் தொழிற்சாலைகளும், ஊரும் அமைதியாக இருந்தபோது, மொத்தத் தண்ணீரும் சுத்தமாக இருந்தது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(அஎ) ஜல்லிக்கட்டுக்கான நுழைவுச் சீட்டு, கிராம கமிட்டியின்மூலம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நடைபெறும் ஜல்லிக்கட்டு விளையாட்டுக்கு ஆன்லைன் மூலமாக வழங்கப்படும்* token-*ஐ இரத்து செய்து, அந்தந்த கிராமக் கமிட்டியின் மூலமாக* token *வழங்க வேண்டும் என்று ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் வலியுறுத்துவதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

(அஉ) தீப்பெட்டித் தொழிலுக்கு எதிரான Plastic lighter விற்பனையைத் தடை செய்தல்-*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள், தீப்பெட்டித் தொழில் நலிவடைந்திருக்கிறது. அதனால், தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசின்*